பள்ளிக் கல்வித் துறை, கால்நடை பராமரிப்புத் துறை, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை, மீன் வளம் மற்றும் பால் வளம் குறித்த சிறப்பான அறிவிப்புகளை வெளியிட்டுள்ள மாண்புமிகு அம்மா அவர்களுக்கு, இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## 2. தகவல் கோரல் *தொடர்ச்சி*

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள் *தொடர்ச்சி*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசினர் தனித் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடு) திரு. துரைமுருகன், உட்காருங்கள், அரசினர் தனித் தீர்மானம் முடியட்டும். (குறுக்கீடு)*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *அரசினர் தனித் தீர்மானத்தை முன்மொழிந்து விடுகிறேன். (குறுக்கீடு) அடுத்து, உங்களுக்குத் தீர்மானத்தின்மீது பேசுவதற்கு வாய்ப்பு இருக்கிறதல்லவா? (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. துரைமுருகன், இது முக்கியமான தீர்மானம் அல்லவா? (குறுக்கீடு)*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *உங்களுக்கு தீர்மானத்தின்மீது பேசுவதற்கு வாய்ப்பு இருக்கிறது அல்லவா? (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. துரைமுருகன், உட்காருங்கள். வேண்டுமென்றால், நீங்கள் பேசும்போது பேசலாம். (குறுக்கீடு)*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *நீங்கள் கொண்டு வந்ததைப் பேசுவதற்கு வாய்ப்பிருக்கிறது. (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. துரைமுருகன், மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள், தீர்மானத்தை முன்மொழியட்டும். நீங்கள் பேசும்போது பேசலாம். (குறுக்கீடு) அனுமதியில்லை, தீர்மானத்தை முன்மொழியட்டும், பிறகு நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு)*

2015 செப்டம்பர் 23]

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** திரு. துரைமுருகன், உங்களுக்கு தீர்மானத்தின்மீது பேசுவதற்கு வாய்ப்பிருக்கிறது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள், தீர்மானத்தை முன்மொழியட்டும். (குறுக்கீடு) அனுமதியில்லை. (குறுக்கீடு) இதையெல்லாம் இப்போது சொல்லாதீர்கள். தீர்மானத்தைத்தான் move செய்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** திரு. துரைமுருகன், கடைசியில், தீர்மானம் மொழிந்தபிறகு, நீங்கள் எடுத்துச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள், தீர்மானத்தை முன்மொழியட்டும். பிறகு நீங்கள் பேசும்போது, பேசலாம். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** அதைப் பின்னால்தானே எடுக்க முடியும்? (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அனுமதியில்லை. நீங்கள் தீர்மானத்தில் பேசும்போது, உங்களுடைய கருத்தைச் சொல்லுங்கள். (குறுக்கீடு) அனுமதியில்லை. திரு. துரைமுருகன், நீங்கள், நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடு) தீர்மானத்தை அவை முன்னவர் முன்மொழியட்டும்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் தீர்மானத்தை முன்மொழிந்த பிறகு, நீங்கள் உங்களுடைய கருத்தைச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) அனுமதியில்லை, நீங்கள் உங்களுடைய கருத்தை பிறகு சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) திரு. துரைமுருகன், பின்னர் உங்களுக்கு நான் மைக் தருகிறேன், உங்களுடைய கருத்தை அப்போது சொல்லலாம். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அதெல்லாம் பேசுவதற்கு இப்போது உங்களுக்கு வாய்ப்பில்லை. (குறுக்கீடுகள்) அனுமதியில்லை. (குறுக்கீடுகள்)

[2015 செப்டம்பர் 23

**திரு. துரைமுருகன்:** Point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதில் Point of order இல்லை. (குறுக்கீடுகள்) அனுமதியில்லை. இப்போது தீர்மானத்தை முன்மொழிகிறார். (குறுக்கீடு) தீர்மானத்தை முன்மொழியட்டும். (குறுக்கீடுகள்) அனுமதியில்லை. தீர்மானத்தில் எல்லாம் Point of order கிடையாது. (குறுக்கீடுகள்) தீர்மானத்தை முன்மொழியட்டும். நீங்கள் உங்களுடைய கருத்தை பிறகு சொல்லலாம். (குறுக்கீடுகள்) உங்களுடைய கருத்தைச் சொல்வதற்கு வாய்ப்புத் தரப்படும். (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** Point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** No point of order. அதில் பாயின்ட் ஆப் ஆர்டரே கிடையாது. (குறுக்கீடுகள்) இல்லை, நான் சொல்கிறேன், எனக்கே தெரியும். (குறுக்கீடுகள்) நானும் அனுபவமானவன். (குறுக்கீடுகள்) எனக்குத் தெரியும், நான் சொல்வதைக் கேளுங்கள். இந்த மாதிரி தீர்மானத்தில் point of order வராது. (குறுக்கீடுகள்) உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) தீர்மானம் முன்மொழிந்த பின்னர், உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். அப்பொழுது, நீங்கள் உங்களுடைய கருத்தைச் சொல்லலாம். (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** Point of order கேட்டால், என்னவென்று நீங்கள் கேட்க வேண்டும்.

*பிற்பகல் 12—20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதில் என்ன Point of order இருக்கிறது? இதில் ஒன்றும் இல்லையே? (குறுக்கீடு) தீர்மானத்தை முன்மொழிவதில் என்ன Point of order இருக்கிறது? (குறுக்கீடுகள்) அதில், பாயின்ட் ஆப் ஆர்டரே கிடையாது. (குறுக்கீடுகள்) Point of order என்றால், சட்டமன்ற விதிகளுக்கு எதிராகப் பேசினால்தான் point of order வரும். அவை முன்னவர் அவர்கள் ஒரு தீர்மானத்தை முன்மொழிவதில் என்ன point of order வருகிறது உங்களுக்கு? (குறுக்கீடுகள்) எப்படி point of order எழுப்ப அனுமதி தருவது? இல்லை, நீங்கள் எடுத்தவுடன் அப்படித்தான் கேட்டீர்கள். (குறுக்கீடுகள்) இல்லை, நீங்கள் எடுத்தவுடன் அப்படித்தான் கேட்டீர்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்கிறேன், தீர்மானத்தை முன்மொழியட்டும். அதன்பிறகு நான் உங்களுக்கு

2015 செப்டம்பர் 23] [பேரவைத் தலைவர்]

*வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்)*

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்ததற்குப் பின்னால், மற்ற உறுப்பினர்களுக்குப் பேசுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதை நீங்கள் தருகிறேன் என்று சொன்னதற்குப் பிறகும் வெளிநடப்பு செய்வது என்பது ஒரு சதவீதம்கூட நியாயம் இல்லாத செயல் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

## 5. அரசினர் தனித் தீர்மானம்

### சென்னையில் சர்வதேச முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்தி, இலக்கை விஞ்சி முதலீட்டினை ஈர்த்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு பேரவை வாழ்த்து தெரிவித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசினர் தனித் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உண்ணவும் நேரமில்லா உழைப்பு, உறங்கவே நினையாத விழிப்பு, (மேசையைத் தட்டும் ஒலி) தனக்காக ஏதுமின்றி, தமிழர்களுக்காகவே வாழ்கின்ற துடிப்பு, (மேசையைத் தட்டும் ஒலி) ஏறெடுத்துப் பார்க்கும் பார்வையும், ஏனென்று கேட்கும் கேள்வியும், உதட்டில் இருந்து உதிரும் வார்த்தையும், உள்ளத்தில் ஒலிக்கும் வேட்கையும், வாள் எடுத்து வீசும் வீச்சும், வானிடியாய் பேசும் பேச்சும், வளையா செங்கோலும், வாரித் தரும் பொற்கரமும், தனக்காக எதுவுமின்றி, எல்லாமே தமிழருக்கே என்று வாழும் வள்ளலே! (மேசையைத் தட்டும் ஒலி) செல்வச் செழிப்பில் உதித்து, அறிவூட்டும் பள்ளியிலே படித்து, பாடங்கள் அனைத்திலும் முதலிடமே வகித்து, (மேசையைத் தட்டும் ஒலி) கூர்மதியில் செழித்து, பேரறிவில் திளைத்து, கழகம் என்னும் பொக்கிஷத்தைக் கட்டிக் காத்து, எத்தர்கள் ஏவிய எண்ணில்லா கணைகளை எதிர்த்து, தகர்த்து, புறமுதுகு காட்டாத போர்க்களங்கள் கண்டு, (மேசையைத் தட்டும் ஒலி) வரலாறும் வாய் பிளக்கும் வாகைகளை வரிசையாய்க் கொண்டு, அதிசயமே*